egistered No. M-2530                'SIDDHANTHAM
Vol. 28—No.

1682
2-55

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

ைர் 28 | மன்மத ஆனி 1955 ஜூன் | இதழ்

REGISTRAR OF BOOKS
20 JUL 1955

உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| நால்வர் திருவாக்கும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களும் | ... | 193 |
| ஆதிபகவன் எண்குணத்தான் அறவாழி அந்தணன் | ... | 199 |
| தாயுமானவர் | ... | 202 |
| இளையான் குடிமாற நாயனர் | ... | 206 |
| நாலாயிரப்பிரபந்த விசாரம் | ... | 209 |

பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.
ரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.
ந்தாந்த மகா சமாஜம்
ரோட், இராயப்பேட்டை, சென்னை-14

JL
R673m211,N78
N55-28-6
186912

# திருமுறைகள் வாங்கிப் பரிசுகள் பெறுக

## ஆயிரம் ரூபா பரிசுத்திட்டம்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் அடங்கிய முதல் ஒன்பது திருமுறைகளையும் பெரியபுராணத்தையும் வாங்குவோருக்கு ஒரு பரிசுத்திட்டத்தை நமது சமாஜம் ஏற்பாடு செய்துள்ளது. முதல் ஒன்பது திருமுறைகளின் விலை ரூபா எட்டு, பெரியபுராணம் விலை ரூபா மூன்று. இவற்றை ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் பெறுதற்குத் தபாற்செலவு ரூ. இரண்டரை. ஆக ரூ. 13-8-0 முன்பணமாக அனுப்புவோர் ஒவ்வொருவருக்கும் மேற்கூறிய புத்தகங்களும், எண் குறித்துள்ள ஒரு டிக்கெட்டும் அனுப்பப்படும். ஆயிரம் டிக்கெட்டுகள் இவ்வாறு செலவானவுடன், " சித்தாந்தம் " பத்திரிகையில் குறிக்கப்படும் ஒரு பொது இடத்தில் ஒரு விடுமுறை நாளில் டிக்கெட்டு எண்கள் குலுக்கப்பட்டு, அவற்றுள் முதலாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. அறுநூறு முதற் பரிசாகவும், இரண்டாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. இருநூற்றைம்பது இரண்டாம் பரிசாகவும், மூன்றாவதாக எடுக்கப்படும் டிக்கெட் எண்ணுடையவர்க்கு ரூ. நூற்றைம்பது மூன்றாம் பரிசாகவும் அளிக்கப்பெறும். இப்பரிசுகள் பெறுதற்குச் சமாஜ அங்கத்தினரும். வேறு பொது மக்கள் எல்லோரும் தகுதியுடையவராவர், வி. பி. மூலமோ, ரயில்வே பார்சல் மூலமோ புத்தகங்கள் அனுப்பப்படமாட்டா. மேற்கூறிய புத்தகங்களோடு சமாஜ இதர வெளியீடுகளையும், நாலாயிர திவ்யப்ரபந்தம் திருப்பாவை வியாக்யானம் முதலியவைகளையும் வாங்குவோருக்கும் இப்பரிசுத் திட்டத்தில் இடமுண்டு. எவ்வளவு சீக்கிரமாக ஆயிரம் டிக்கெட்டுகள் விற்றுமுடிகின்றனவோ, அவ்வளவு சீக்கிரம் பரிசுகள் தரப்படும். ஆகையால் அன்பர்கள் விரைந்து வாங்குக. இலங்கை நண்பர்கள் இந்தியாவிற்குப் பணம் அனுப்புவதில் பலதடைகளும் தாமதமுமிருப்பதால், அவர்கள் மட்டும் வி. பி. தபால் மூலம் புத்தகங்களைப் பெறலாம். மணியார்டர் அனுப்பவேண்டிய விலாசம் :— திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1. இங்ஙனம் : ச. சிவகுமாரன், காரியதரிசி, சைவ சித்தாந்த மகாசமாஜம் ; ம. பாலசுப்பிரமணியன், பத்திராசிரியன், " சித்தாந்தம் " 10—6—1955.

Regd M. 2330

உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 28 | மன்மத ஆனி 1955 ஜூன் | இதழ் 8

# நால்வர் திருவாக்கும் ஆழ்வார்கள் அருளிச்செயல்களும்*

பத்திராசிரியர்

சைவத்திற்கும் வைணவத்திற்கும் நூற்றுக்கு நூறு பங்கு ஒற்றுமையுண்டென்று நான் அடிக்கடி சொல்வது வழக்கம். வேற்றுமை பாராட்டும் அறிஞர்கள், வண்ணான் அழுக்குத் துணியைத் துவைத்துப் பிழிவதுபோலத் திருமாலையும் வைணவத்தையும் தாக்கித் துவைத்துப் பிழிந்து, சிவபரத்துவம் கூறுவதையும் நான் பார்த்திருக்கிறேன். அவர்களோடு நான் சண்டைக்குச் செல்வதில்லை. அம்மட்டில் அவர் மகிழ்க என்றும், அவர்கள் வாழ்நாளில் ஏதேனும் ஒரு சமயம் இறைவன் அவர்களைத் திருத்தி ஆட்கொள்வான் என்றும் நான் எண்ணுவதுண்டு. வைணவர் பலர் சைவத்தைத் தாக்குவதில் பிரியப்படுவதால், நாம் ஏன் ஒற்றுமை பாராட்டவேண்டும் என்று சைவர்கள் அடிக்கடி கூறுவதையும் நான் கேட்டிருக்கிறேன். தாக்குவதால் சிறுமையும், ஒற்றுமை பாராட்டுவதால் பெருமையும் தாமே போதரும் என்பதை அறிஞர்கள் நன்குணர்வர்.

*பழநியில் 16-5-55ல் நடந்த சைவ மாநாட்டில் யான் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம். அடுத்துள்ள இரு கட்டுரைகளும் இவ்வாறேயுள்ளவை.

சைவத்திற் கடிப்படையான ஆதார நூல்கள் சமய குரவர் நால்வருடைய திருவாக்கு. வைணவத்திற்கடிப்படை ஆழ்வார்கள் அருளிச் செயல்கள். நால்வரும் ஆழ்வார்களும் தமிழ் நாட்டில் அவதரித்துத் தமிழர் நாகரிகத்திற் படிந்து, அந்த நாகரிகத்தில் முதிர்ந்தெழுந்த சமயக் கொள்கைகளை யுடையவர்கள். சிவபெருமான் என்றும் நாராயணன் என்றும் வெவ்வேறு பெயர்கொண்டு ஒரே முழுமுதற் கடவுளை வழிபட்டவர்கள். தத்துவக் கொள்கைகளைக் கவனித்தால் ஒற்றுமை நன்கு விளங்கும். ஒருமணிநேர அளவில் பேசி முடித்தற்குரிய சிற்சில பகுதிகளை மட்டும் இனி கருதலாம். முதன் முதலாகக் கடவுளைப் பற்றியக் கருத்தொற்றுமை யைக் கண்டின்புறலாம். பிறகு உலகம் உயிர் முதலியன பற்றியவற்றைக் காணலாம்.

கடவுள் வியாபகத் தன்மையை அஷ்ட மூர்த்தம் என்பது சைவவைணவ மரபு. பஞ்சபூதங்களிலும், சூரியன் சந்திரன் ஆன்மா ஆகிய மூன்றிலும் கடவுள் காட்சியளிக் கிறார் என்பர் சைவரும் வைணவரும்.

இவைபற்றிய மேற்கோள்கள் ஆயிரக்கணக்கிலுள் ளன. மாதிரிக்காக இரண்டொன்றே காட்டுதல் போதும். இவ்வாறே ஏனைய தலைப்புக்களுக்கும் உட்பிரிவுகளுக்கும் கொள்க. "மண்ணும் புனல் உயிரும் வருகாற்றும் சுடர் மூன்றும் விண்ணும் முழுதானான்" என்று சம்பந்தர் தேவாரம் 111-ம் பாசுரம் கூறுகின்றது. "இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியும் காற்றுமாகி, அரு நிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி... மிளிர்புன் சடையடிகள் நின்றவாறே" என்று அப்பர் தேவாரம் 7:63-ம் பாசுரம் கூறும். "அட்டமூர்த்தியை மட்டவிழ் சோலை ஆரூரானை மறக்கலும் ஆமே" என்பது சுந்தரர்தேவாரம் 7828-ம் பாசுரம். "நிலம் நீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் புலனாய மைந்தனோ டெண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்" என்பர் வாதவூரடிகள் (திருவாசகம் 319). "புகழுநல் ஒருவன் என்கோ பொரு வில் சீர்ப்பூமி யென்கோ, திகழுந்தண் பரவை என்கோ தீயென்கோ வாயுவென்கோ, நிகழுமாகாச மென்கோ நீள் சுடரிரண்டு மென்கோ, [illegible] னைத்து மென்கோ

186912



கண்ணனைக் கூவுமாறே" என்று இக்கருத்தையே நம்மாழ் வார் கூறுகிறார் (நாலாயிர திவ்யப்ரபந்தம் 2930).

கடவுள் அந்தமும் ஆதியும் ஆவார் என்று இருசமயமும் கூறும். "அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல்" (சம்பந்தர் 415) "ஆதியாய் அந்தமானார்" (அப்பர் 4530) "ஆதியும் அந்தமும் ஆயினருக்கு ஆடப்பொற்சுண்ணம் இடித்து நாமே" (திருவாசகம் 214) "அந்தமாய் ஆதியாகி" (பிரபந்தம் 1306).

கடவுள் ஒருவரே. அவரே மும்மூர்த்திகளும் அவர் கட்கு மேலாகிய சதுர்த்தப்பொருளும் ஆவார். ஒவ்வொரு வரும் வழிபடும் இஷ்ட தெய்வத்தில் வந்து அவரே அருள் செய்கிறார் என்று சைவமும் வைணவமும் கூறுகின்றன. "படைத்தளித் தழிப்ப, மும்மூர்த்திகள் ஆயினை" (தேவாரம் 1382( "வரியாய மலரானும் வையம் தன்னை உரிதாய அளந்தானும் உள்ளுதற் கங்கரியானும் அறியாத...பெரி யான்" (தே. 1290) மூவராலும் அறியொணா முதல்ஆய ஆநந்த மூர்த்தியான் (திருவாசகம் 579) முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன் (பிரபந்தம் 2096) அரியை அயனை அரனை அலற்றி...வீடுபெற்ற சட கோபன் (பிரபந்தம் 3776) நானாவித உருவாய் நமையாள் வான் (தே. 91) ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும் (தே. 6432) தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே, தமர் உகந் தது எப்பேர் மற்றப்பேர்... அவ்வண்ணம் ஆழியான் ஆம் (பிர. 2125) நும் இன்கவி கொண்டு நும் நும் இட்டா தெய் வம் ஏத்தினால் செம்மின் சுடர்முடி என் திருமாலுக்குச் சேருமே (பிர. 2990).

இந்த நிலையிலிருப்பவர்கள் ஒரு தெய்வ வழிபாட்டைக் கைக்கொள்ளும் உயர்வினர்; சிறந்த சமய சமரசஞான முடையர்; வேறு சமயங்களை என்றும் இகழாதவர்களாவர். "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம் சிவ பெருமான் திருவடியே சேரப்பெற்றோம்" (தே. 7209) விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே எரிவி னாற் சொன்னாரேனும் எம்பிராற்கேற்றதாகும் (தே. 4744) அறிவினால் மிக்க அறுவகைச் சமயம் அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து (தே. 7792) வணங்கும் துறைகள் பலபல.

வாக்கி மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி அவை அவைதோறணங்கும் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பிவைத்தாய் (பிர. 2573) யாவையும் யவரும்தானாய் அவரவர் சமயந்தோறும் தோய்விலன் (பிர. 2939).

கடவுள் நமக்குச் செய்யும் சிறந்த உதவிகளுள் மிக உயர்ந்தது, நமது குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு, பாவங்களை மன்னித்து, நமக்கு நன்மை செய்தலேயாகும். இதைக் கிறிஸ்தவம் முதலிய உலகப் பெருஞ் சமயங்களும் கூறுகின்றன. சைவ வைணவங்களுள் இது ஒரு அருமை மிக்க கொள்கை. "நற்றமிழ் வல்ல.. குற்றம் செய்யினும் குணம் எனக்கருதும் கொள்கைகண்டு" (தே.7787) நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே (திருவாசகம் 502) நன்றேயனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால் (திருவாசகம் 498) வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினால் பொறுப்பவனே (திருவாசகம் 409) குன்றனைய குற்றம் செயினும் குணம் கொள்ளும் (பிர. 2122) வைது நின்னை...செய்த குற்றம் நாற்றமாகவே கொள் ஞாலநாதனே (பிர. 862) இதிலிருந்து, கடவுளை வழிபடுவோருக்கு வினைகளின் துன்பம் ஒழியும் என்ற நம்பிக்கையும் வாழ்க்கையைச் செம்மையாக நடத்தலாம் என்ற தைரியமும் உண்டாகின்றன. "அல்லல் என் செயும் அருவினை வினை என்செயும், தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும், தில்லைமாநகர்ச் சிற்றம்பலவனுக்கு, எல்லையில்லதோர் அடிமை பூண்டேனுக்கே (தே. 5232) வினையா லடர்ப்படார் வெந்நரகில் சேரார் தினையேனும் தீக்கதிக்கட் செல்லார்...கரியானைக் கைதொழுதக்கால (பிர. 2146).

இம்மட்டில் கடவுளைப்பற்றிய குறிப்புக்களை முடித்துக் கொண்டு உயிர்களைப் பற்றிச் சைவ வைணவங்கள் கூறும் கருத்துக்கள் சிலவற்றைக் காணலாம். கடவுள் வழிபாட்டிற்குச் சிறந்த சாதனம் இம்மானுடப் பிறவியே. இதை மதித்தல்வேண்டும். நல்வழியிற் பயன்படுத்தல் வேண்டும். "குனித்த புருவமும்...எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே (தே. 4941) வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின் (தே. 4942) என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற இன்னம்பாலிக்குமோ இப்பிறவியே (தே. 5229) புவனியிற்போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே...என்று...திருமாலாம் அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்படவும் (திருவாசகம் 377) மானிடப் பிறவி வேண்டினரே (பிர. 2039) கடவுள் நமக்குக் கருவி கரணங்களைக் கொடுத்திருப்பது இறை வழிபாட்டிற்கும் அடியார் வழிபாட்டிற்கும் தொண்டு பணி முதலியவற்றிற்குமேயாம். இவ்வழிகளிலேயே அவைகளை உபயோகித்தல் வேண்டும்." தலையே நீ வணங்காய் ..கண்காள் காண்மின்களோ...(தே. 4240—4251) ஆமாத்தூர் அம்மானைக் காணாத கண்... கூறாதநா...நெஞ்சம் (தே. 1942—1948) சிந்தனை நின்தனக் காக்கி...ஐம்புலன்களார...(திருவாசகம் 30) வாய் அவனையல்லது வாழ்த்தாது...காணாகண் கேளாசெவி (பிர. 2092) அன்பு ஆழியானை அணுகென்னும்...செவி கேள் என்னும் (பிர. 2153) இறைவனைப் பாடாதநாள் பிறவாநாள் பட்டினிநாள் எனலாம் (தே. 6244—53 பேசாத நாளெல்லாம் பிறவாநாளே) நமோநாரணா என்று எண்ணா நாளும்...பட்டினிநாளே (பிர. 438).



இறைவழிபாட்டில் பல வகையுண்டு. பூவும் நீரும் கொண்டு வழிபடலாம், அன்புநீர் கொண்டும் சொல்மாலை கொண்டும் அகப்பூசை செய்யலாம், ஞானயோக வழிபாடு செய்யலாம், மந்திர ஜெபத்தாலும் வழிபடலாம். "நீ நாளும் நன்னெஞ்சே...பூநாளும் தலைசுமப்ப..." (தே. 1908) கற்றுக்கொள்வனவாயுள நாவுள இட்டுக்கொள்வன பூவுள நீருள (தே. 6127) பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் (திருவாசகம் 317) சிந்தை வெள்ளப்புனலாட்டிச் செஞ்சொல்மாலை அடிச்சேர்த்தி...(தே. 4313) பரிவதில் ஈசனைப்பாடி...நன்னீர் தூய் புரிவதும் புகைபூவே (பிர. 2730) அன்பினால் ஞானநீர் கொண்டாட்டுவன் அடியனேனே (பிர. 2046) சொற்களென்னும் தூயமாமாலை கொண்டு சூட்டுவன் (பிர. 2047) உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக, மடம்படும் உணர் நெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி, இடம்படுஞானத் தீயால் எரி கொள...கழலடி காணலாமே (தே. 4887) அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக...ஞானச்சுடர் விளக்கேற்றினேன் (பிர. 2182) நற்றுணையாவது நமச்சிவாயவே (தே. 4262)

ஆலைப்படு கரும்பின் சாறுபோல அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத்தான் (தே. 6764) அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை...கரைகாட்டி ஆட்கொண்டாய் (திருவாசகம் 31) நற்றுணையாகப் பற்றினேன் அடியேன்நாராயணா என்னும் நாமம் (பிர. 955) தேனும் பாலும் அமுதுமாய திருமால் திருநாமம் நானும் சொன்னேன் நமரும் உரைமின் நமோநாராயணமே (பிர. 1543).

உண்ணாவிரதங்கள், உடம்பை வாட்டும் யோகநெறி முதலியன வேண்டா, பக்தி வழிபாடு நமக்குப் போதிய நன்மைதரும். "வீடு ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்வாடிஞானம் என்னுவது...இசைபாடு ஞானம்வல்லார் அடிசேர்வது ஞானமே (தே. 1490) வாடி ஊனை வருத்தித் திரியில் என்...அம்பலக்கூத்தனைப் பாடவல்லார்க் கல்லாற் பயன் இல்லையே (தே. 6230) நன்று நோற்கில் என் பட்டினியாகில் என் (தே. 6231) ஊன் வாட உண்ணாது... தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா (பிர. 1158) பொருப்பிடையே நின்றும்...வேண்டா...மலர் தூய்க்கை தொழுதால் (பிர. 2357) எவ்வுயிர்க்கும் சிற்றவேண்டா சிந்திப்பே அமையும் (பிர. 3563)

நமது நல்ல ஞான நிலையை உலகபாசம் வந்து தாக்கும்போது நமக்கு உறுதுணையாவது அடியார் கூட்டுறவு. ஆகையால் எப்போதும் நமது நன்மைக்காகவே அடியாரிணக்கத்தை என்றும் கைவிடக்கூடாது. "ஞானம் வல்லார் அடிசேர்வது ஞானமே" (தே. 1490) பணிவாரொடே விரவுமின் (தே. 5658) ஆடுமின் அன்புடையீர் அடிக்காட்பட்ட தூளிகொண்டு சூடுமின் (தே. 7445) மெய்யடியார்கள் தம் ஈட்டம் கண்டிடக் கூடுமேல்...பயனுவதே (பிர. 658) தொண்டரடிப் பொடிஆட நாம்பெறில் (பிர. 659) நெடுமாற்கடிமை...அவனடியாரடியே கூடுமிதுவல்லால் (பிர. 3546) பயிலுஞ்சுடரொளி...திருவுடையார் யவரேனும் அவர்கண்டீர்...எம்மையாளும் பரமரே (பிர. 2963).

வேறு நூற்றுக்கான ஒற்றுமை நயங்களுமுண்டு. விரிவஞ்சி இவ்வளவில் விடுத்தாம். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் மேலும் மேலும் ஒன்றுமையுணர்ச்சியில் நம்மைத் திளைக்க வைப்பானாக.

# 'ஆதிபகவன் எண்குணத்தான் அறவாழி அந்தணன்'

C. N. சிங்காரவேலு முதலியார், M.A.,

நான் சைவர் மகாநாட்டில் பேசுவது இதுவே முதன் முறை. எனது சொற்பொருவின் தலைப்பு திருக்குறள் கடவுள் வாழ்த்தில் உள்ள சில சொற்களால் அமைந்தது. திரு. ம. பா. அவர்கள் அன்பு கூர்ந்து அளித்தது. திருவள்ளுவர் வரலாறு, காலம், கொள்கை. சமயம் முதலியன நாம் ஆராய்தற்குரிய பொருள்களாயினும் அவ்வாராய்ச்சி சொற்பொழிவில் நெடுநேரத்தைக் கொள்ளை கொள்ளுமாகையால், அதில் நான் இறங்கத் துணியவில்லை. பெரும்பாலோர் திருவள்ளுவர் கி. பி. இரண்டாம் நூற்றுண்டினர் என்றும் சைவசமய குரவர்கள் வைணவ ஆழ்வார்கள் காலத்துக்கு முந்தியவர் என்றும் கூறுகின்றனர். திருக்குறள், தமிழர்கள் பண்பாடு, நாகரிகம், ஒழுக்கம், சமயம் முதலிய எல்லாவற்றிற்கும் இருப்பிடம் என்று சொல்லுவதில் எவ்விதத் தடையும் இல்லை. திருவள்ளுவருக்குப் பின் வந்த நீதி நூலாசிரியர்கள் அனைவரும் இவர் அடிச்சுவட்டையே பின் பற்றுகின்றனர். தமிழ் மக்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும், அதைச் செப்பனிடும் கருவியாகவும், நம்மையறியாமலே நம் இரத்தத்திலே கலந்திருக்கும் அமிர்தமாகவும் இருப்பது திருக்குறளே. ஆங்கிலேயர்களுடைய பண்பாடு விவிலிய நூலால் (Bible) அமைந்தது என்று (Dean Inge) என்னும் பெரியார் கூறுகிறார்கள். தமிழர் பண்பாடு திருக்குறளால் அமைந்ததெனக் கூறுவது அதைக் காட்டிலும் பெரிய உண்மையாகும்.

பண்டையோர்கள், வாழ்க்கையின் புருஷார்த்தங்களை நான்காகப் பிரித்தார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. ஆனால் திருக்குறளில் வீடு கூறப்படவில்லை. அறத்துப்பால். பொருட்பால்; காமத்துப்பால் எனும் மூன்றையே வள்ளுவர். பெரும் பிரிவுகளாகக் கொண்டனர். பரிமேலழகர் கூறியபடி சிந்தைக்கும் வாக்குக்கும் எட்டாத தொன்றாகலின் வீட்டைக் குறிப்பாக வைத்தாரே ஒழிய

வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஒழுக்க நெறியின் கனிந்த நிலையே வீட்டு நெறியாதலால் அதனை ஒழுக்கநெறியுள் அடங்கவைத்தார். கடவுள் வாழ்த்து, துறவறம், மெய்யுணர்தல், முதலிய பகுதிகள் திருக்குறளிலிருப்பதால் பொதுவாகத் திருவள்ளுவர் நாஸ்திகர் அல்லரென்று கூறலாம். ஆனால் அவர் எந்த சமயத்தைச் சார்ந்தவர் என்று வெளிப்படையாகக் காட்டவேயில்லை. ஒவ்வொரு சமயத்தவரும் தங்களில் ஒருவர் என்று கொண்டாடும்படி அவ்வளவு திறமையாகத் தமது நூலை அமைத்திருக்கிறார். திருக்குறளை, எல்லாச் சமயத்தவர்களும் ஒப்புக்கொள்ளும் கொள்கை ஒழுக்கம், குறிக்கோள், பண்பு முதலியவைகள் நிரம்பிய நூலாக வேண்டுமென்றே ஆக்கியிருக்கிறார்.

திருவள்ளுவர் காலத்தில் பல சமய உட்பிரிவுகள் இல்லை. சங்கரர், ராமானுஜர், மாத்வர், மெய்கண்டார் முதலியவர்கள் காலத்துக்கு முற்பட்டவர். அக்காலத்தில் பொதுவாக பௌத்தம், ஜைனம், வைதிக மதம் முதலிய பெரும் பிரிவுகளே இருந்தன. டாக்டர் G. U. போப் கூறுவதுபோல் சைவசித்தாந்தம் தமிழர் சமயமாகும். எனவே திருவள்ளுவரைச் சைவசித்தாந்தி என்று கொள்வதில் எவ்விதத் தவறுமில்லை. திருக்குறள் சைவசித்தாந்தக் கருத்துக்களை (இலைமறை காய்போல்) கூறும் முதல் நூல் என்று கொள்வதில் எவ்விதத் தவறுமில்லை. "தேவர் குறளும் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும் முனிமொழியுப்—கோவை, திருவாசகமும் திருமூலர் சொல்லும், ஒருவாசகம் என்றுணர்" எனும் பழம்பாடல் தேவர் குறளை முதலிடத்தில் வைத்துள்ளது நோக்கத்தக்கது. திருக்குறள் "அகர முதல வெழுத்தெல்லாம், ஆதிபகவன் முதற்றே யுலகு" என்று தொடங்குகின்றது. இந்த அகர உவமை சைவ சித்தாந்திகள் தங்கள் சாஸ்திரங்களுள் கையாள்வதொன்று. தொல்காப்பியம் கூறுகின்றபடி அகரம், அங்காத்தலைக் குறிக்கும். வாயைத் திறக்கும்போதே உண்டாகும் ஒலியே அகரம் எனப்படும். ஏனைய எழுத்துக்களையும் உச்சரிப்பதற்கு இது நிமித்தகாரணமாய் உள்ளது. கடவுள் உலகத்தில் நிமித்த காரணனாக இருத்தற்கு இந்த அகர உவமை மிகப் பொருத்தமானது. வேறு பல சித்தாந்தக் கருத்துக்களும் இதில் அடங்கியுள்ளன.



ஆதிபகவன் எனும் தொடர், சிவபெருமானைக் குறிக்குமென்று சைவர்கள் கூறுவர். பதினோராவது நிகண்டில் "பகவனே ஈசன் மாயோன் நான்முகன் சினனே புத்தன்" என்று கூறப்படுவதிலிருந்து பல கடவுளர்க்கு அப்பெயர் பொருந்துவது விளங்கும். பகவான் வால்மீகி, வியாச பகவான், கிருஷ்ணபகவான், சனிபகவான், பகவான் ரமண ரிஷி, பகவான் இராமகிருஷ்ண பரம ஹம்ஸர், பகவான் அரவிந்தகோஷ் முதலிய பலர் பெயர்களிலும் பகவான் எனும் சொல் சேர்ந்திருக்கிறது. ஆகையால் முதன் முதலில் மிகப் பழைய காலத்தில் சிவபெருமானையே குறித்தது இச்சொல் ஆகலின் ஆதிபகவன் என்பது சிவபெருமானையே குறிக்கும் (பல நூற்றாண்டுகளாகப் பல பீடங்களில் அமர்ந்துள்ள சங்கராசாரியர்கள் எல்லோருக்கும் காலத்தால் முற்பட்டவரை ஆதிசங்கராசாரியர் எனும் உலக வழக்கை நோக்குக.) ஆதிபகவன் என்பது உமையொருபாகன் என்று பொருள்படும் என திரு. கா. சுப்பிரமணியப்பிள்ளை கூறியதும் இங்கு நினைத்தற்குரியது.

கடவுள் வாழ்த்தில் திருவள்ளுவர் குறிக்கும் வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமையிலான், இருவினையுஞ் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான் எனும் தொடர்கள் கடவுள் இலக்கணம் பற்றிச் சைவர்கள் கூறும் பற்பல நுண்ணிய கருத்துக்களை அடக்கியுள்ளன. அவைகளை விரிவாக எடுத்து விளக்கக் காலம் இடந்தராது.

இனி 'எண்குணத்தான்' என்பதிலும் சைவக் கருத்துக்கள் விளங்குகின்றன. பரிமேலழகர் எண் குணங்கள் எவை என்பதை விவரித்து அவை சைவ ஆகமங்களில் கூறப்படுகின்றனவென்றும் குறித்துள்ளார். இதிலிருந்து எண் குணத்தான் சிவபெருமானே என்பது புலப்படும். தேவார, திருவாசகங்களிலும் சிவபெருமானை எண்குணத்தான் எனும் வழக்கம் காணப்படுகின்றது. "ஏழிசையும் எண்குணங்களும்......ஒரு தலைவன்" என்று சம்பந்தரும், "எண்குணத்தவன் காண்" என்று அப்பரும், "மறையவனை எண்குணத்தினானை" என்று சுந்தரரும் தேவாரத்தில் 1405, 5861, 7630-ம் பாடல்களில் கூறுவதை நோக்கலாம். வைணவர்களும் ஜைனரும் வெவ்வேறு எண்குணங்களைக்

கூறுவர்.) இனி அறவாழி அந்தணன் எனும் சொற்றொடரில் கடவுள் அறக்கடலாகவும், அந்தண்மை செறிந்தவனாகவும் உள்ளநிலை கூறப்படுகிறது. மற்றொரு குறளில் "அந்தணர் என்போர் அறவோர், மற்றெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்" என்பதிலிருந்து எல்லாவுயிர்களிடத்தும் தண்ணிய அன்பு செலுத்துபவனே அந்தணன் ஆவான் என்பது விளங்கும். எனவே அறவாழி யந்தணன் எனும் தொடர் இரக்கத்தோடு நீதி செலுத்தும் கடவுளைக் குறிக்கும். இதில் பாவ மன்னிப்பு, கருணை முதலியன அடங்கியுள்ளன. கடவுள் வாழ்த்தில் நற்றாள், மாணடி, தாள் என்று ஆங்காங்கு திருவடி குறிக்கப்படுவதும் சைவத்தை வலியுறுத்தும் சான்றாகும். திருவடி முத்தி சைவத்தின் சிறந்த கொள்கை.

இதுகாறும் கூறியவாற்றால் உயிருக்கு உறுதி பயப்பன அறம், பொருள், இன்பம் என்றும்; பொருளும் இன்பமும் அறத்தை அடிப்படையாகக் கொண்டு ஒழுகினாலல்லது உறுதியாகாவென்றும்; அறமாவது கடவுளது ஆணையாகிய பணியே யென்றும்; கடவுளை அறத்திற்கு முதலாகக் கருதியொழுகும் ஒழுக்கமே, பின் கனிந்து இக்கடவுளைத் தலைப்பட்டுணரும் மெய்யுணர்வுக்கு ஏதுவாகிய மெய்ந்நெறியாக மாறிநின்று வீடுபயக்குமென்றும்; ஒருவாறு எனது சிறு சொற்களால் விளக்க முயன்றேன். எனது புன்மொழிகளை அமைதியுடன் கேட்ட உங்கள் அனைவர்க்கும் நன்றி. இங்கு என்னைப் பேசப் பணித்த திரு. அரங்கசாமி முதலியார் அவர்கட்கும் திரு. ம. பா. அவர்கட்கும் எனது வணக்கம்.

---

# தாயுமானவர்

ஆ. அப்பாதுரை, குளிக்கரை

'தாயுமானவர்' என்ற பெயர் இருவரைச் சாரும். ஒன்று திரிசிராப்பள்ளி மலைமேல் எழுந்தருளியிருக்கும் எல்லாம் வல்ல இறைவனையும் மற்றொன்று அவர் பெயரைத்



தாங்கி நின்ற சிறந்த சைவ சித்தாந்தியாகிய தாயுமான அடிகளையும் சாரும். எம்பெருமான் தாயுமாகிய செய்தியை அத்தல புராணமாகிய 'செவ்வந்திப் புராணம்' மிக அழகாக விவரிக்கின்றது. அதை ஒரு சில சொற்களில் நினைவூட்டுதல் போதும் என்றே கருதுகின்றேன்.

ரத்னாவலி என்ற ஒரு வணிகப் பெண்ணுக்கு பிள்ளைப் பேறு நெருங்கும் வேளை. அவளுடைய தாய் ஒவ்வொரு கணமும் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் எதிர்பார்க்கப்படுகின்றாள். ரத்னாவலியின் தாயும் விரைந்துதான் வந்தாள். ஆனால் அப்போது காவிரியின்கண் பெருவெள்ளம். ஆகவே அவள் அக்கரையிலேயே தடைப்பட்டு நின்றாள். ரத்னாவலியோ இறைவனை நோக்கி, "ஆண்டவனே! என் தாய் யாது காரணத்தாலோ இதுகாறும் வரவில்லை. நீயே எனக்கு வேண்டிய உதவிகளைச் செய்தருளல் வேண்டும்" என்று முறையிட்டதின் விளைவாக, எம்பெருமான் அவளுடைய தாயைப் போலவே, வந்து பிள்ளைப்பேறு பார்த்தருளிப் பின்னர் மறைந்தருளுகிறார். பின்னர் காவிரியில் வெள்ளம் குறைந்ததினால் உண்மையான தாய் வருகிறாள். "சற்று முன் வந்தவள் நீதானோ?" என்று ரத்னாவலி கேட்கிறாள். அப்போதுதான் எம்பெருமான் தாயும் ஆன அற்புதம் வெளியாகின்றது.

"இறைவன் அடியார்கட்கு வேண்டும்போதெல்லாம் வேண்டியவாறெல்லாம் வந்து உதவுகிறார்" என்ற ஒரு உண்மையை உலகப் பெரும் சமயங்களெல்லாம் ஒத்துக் கொள்கின்றன. இந்த வுண்மையை ஒட்டியே இவ்வரலாறும் அமைந்துள்ளது. மேலும் சிவபெருமான் தந்தையாகச் சண்டேசுர நாயனாருக்கு அருள் செய்தும், பன்றியாகக் குட்டிகளுக்கு மதுரையிலே பால்கொடுத்துதவியும், தொண்டனைப் பிட்டுக்கு மண்சுமந்தும், தூதனாக சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நள்ளிரவிலே தூதுசென்றும், குதிரைச் சேவகனாகவும், தண்ணீர்ப் பந்தல் வைத்தும், கட்டமுது கொடுத்தும், இன்னும் வெவ்வேறு வழிகளிலெல்லாம் அன்பர்கட்கு உதவி செய்திருக்கிறார். இறைவன் தாயுமாகிய வரலாற்றை அப்பர் சுவாமிகள் எவ்வாறு சொல்லியுள்ளாரென்பதைக் கீழே காணுங்கள்:

"தாயுமாய் எனக்கே, தலைகண்ணுமாய்
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை
தேயநாதன் சிராப்பள்ளிமேவிய
நாயனார் என நம்வினை நாசமே"

என்று பாடியுள்ளார்.

அடுத்து, "நாடெனப்படுவது சோழநாடு" என்று பல புலவர் பெருமக்களால் போற்றிப் புகழப்பட்ட சோழ நாட்டில் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் மரபில் வந்தவர் கேடிலியப்பப் பிள்ளை என்பவர். இவர் கெஜவல்லி என்னும் அம்மையாரை மணம்புரிந்து இல்லறம் இனிது நடாத்தினார். தனது தமையனாராகிய வேதாரண்யம் பிள்ளை என்பவர் மகவு இல்லாமல் வருந்துகின்றார் என்பதையறிந்து, தான் பெற்ற ஒரே செல்வத்தை—சிவசிதம்பரத்தை—வளர்ப்புப் பிள்ளையாகக் கொடுத்தார். பின்னர் திருச்சியில் முத்துக்கிருஷ்ண நாயக்கன் அரண்மனையில் உயர்பதவி வகித்தார். இவர் தினந்தோறும் தாயுமான ஈசனை வணங்கித் தமக்குப் பிள்ளைபேறு கொடுத்தருளுமாறு வேண்ட, இறைவனும் அருள்காட்ட, கெஜவல்லி அம்மையார் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தார். அவர்தான் தாயுமானவர்.

தந்தை இறந்த பின்பு தாயுமானவர் அரசாங்க அலுவலைப் பார்த்தார், இவரும் தினந்தோறும் மலைமேலிருக்கும் ஈசனை வழிபட்டுவருதல் வழக்கம். ஒரு நாள் இறைவனை இறைஞ்சிவிட்டுத் திரும்புகையில் மூலன் மரபில் வரும் மௌனகுருவின் காலில் விழுந்து உபதேசம் செய்யுமாறு கேட்கவும், அதற்கு அவர் "இல்லறம் செய்து பின்னர் துறவறம் வா" என்று சொன்னார். எனவே தாயுமானவர் அவ்விடமிருந்து அகன்றார். பின்னர் தமது தமையனாரின் வேண்டுகோளுக்கிணங்கி மட்டுவார் குழலி என்ற மங்கையை மணம் செய்துகொண்டு சிறிது காலம் இல்லறம் இனிதே நடாத்திக் கனகசபாபதி என்ற மகவையும் பெற்றார். பின்னர் தாயும், மனைவியும் சிவபதமடையவே, இவர் தனது மைந்தனைத் தனது அண்ணனாகிய சிவசிதம்பரத்திடம் ஒப்புவித்துவிட்டுத் துறவு பூண்டார். மௌனகுருவிடம் உபதேசம் பெற்றார். பின்னர் இராமநாதபுரத்திற்கு லிட்டைபுரியச் சென்றார். அவண் சமாதியடைந்தார். இனி



அவருடைய பாடல்களைப்பற்றியும் அவற்றின் தன்மைகளைப் பற்றியும் சிறிது கவனிப்போம்.

இவருடைய பாடல்கள் ஆற்றொழுக்குப்போன்ற செம்பாகமான நடையில் அமைந்தவை. இசையில் அமைவிக்க அல்லது இசையில் பொருத்தவும் ஏற்றவை. படிப்பதற்கு எளியன, பக்திச்சுவையூட்டுவன, உள்ளத்தை உருக்கும் இயல்பின. அடிகளாரின் பாடல்கள் 'வடசொல்லும், தென் தமிழும் இணைந்து, பிணைந்து பொருளும் ஓசையும் மிளிர்ந்து மகிழ்விக்கும் இயல்பின.

தாயுமானவர் நூல் சமய அநுபவநூல்—தத்துவ சாத்திர நூல்—சாத்திரக் கருத்துக்களை நேராக, எளிதாகப் பொருள்கொள்ளும் முறையில் அவர் அமைத்திருப்பது பெரிதும் போற்றற்குரியது. சைவ சித்தாந்தத்திற்கு ஒரு ஒப்புயர்வற்ற சிறந்த கருவூலம் அவருடைய நூல். நூலில் உள்ளடங்கியுள்ள பொருளின் கருத்தைச் சுருக்கி முதலிற் சொல்வது 'உபோற்காதம்' எனப்படும். உதாரணமாகத் திருவாய்மொழிப்பாசுரங்களிலுள்ள கருத்தைத்தான் முதல் பாசுரமாகிய 'உயர்வற வுயர்நல முடையவன் எவனவன்......' என்று தொடங்குகின்ற பாடல் கூறுகிறது. அதாவது இந்த முதல் பாட்டிலே காணப்படுகின்ற கருத்தைத்தான் பின்னே வருகின்ற அத்தனை பாடல்களும் கூறுகின்றன என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அதேபோலத்தான் அடிகளாரின் முதல் பாடலாகிய 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது......' என்று தொடங்கும் பாடலும். இவர் ஒரு சிறந்த சைவ சித்தாந்தி என்பது,

"பொய் கண்டார் காணாப்புனிதமெனும் அத்துவித
மெய்கண்டநாதன் அருள்மேவும்நாள் எந்நாளோ"

என்று சைவ சித்தாந்த முதல் சந்தான குரவராகிய மெய்கண்டாரையே போற்றியிருத்தலால் நன்கறியலாம். மேலும் இவர் அருணகிரிநாதர், சிவவாக்கியர், பட்டினத்தார், திருமூலர், தேவாரமூவர், மாணிக்கவாசகர், மெய்கண்டசிவம், உமாபதிசிவம் ஆகிய எல்லோரையும் பாடியிருத்தலினாலும் இவரை ஒரு சிறந்த சைவ சித்தாந்தி என்றே கூறலாம்.

நேயர்களே! இவர் சைவ சமயமே நல்லது, மற்ற சமயங்களிலெல்லாம் பொய் புலம்புகிறது என்பதையும், ஆகவே உலகத்து மானிடரைச் சைவ சமயத்தில் சேர அழைக்கின்ற முறையினையும் கவனியுங்கள்.

“சைவசமயமே சமயம் சமயாதீதப் பெரும்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும் இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும் ஜகத்தீரே”

என்பதாகும்.

அடுத்து, நாம் செய்கின்ற கர்மங்களை அருளினால் போக்கமுடியும் என்பதைக் “காகமானது கோடி கூடுகின்றாலும் ஒரு கல்லின் முன் எதிர்நிற்குமோ? கர்மமானது கோடி கூடுகின்றாலும் நின் கருணைப் பிரவாக அருளைத் தாகமாக நாடினரை வாதிக்க வல்லதோ?” என்று கூறுகிறார்.

கடைசியாகத் தனது குருவாகிய மௌனகுரு உபதேசத்தை வற்புறுத்தி, “சொல்லால் முழக்கிலோ சுகமில்லை, மௌனியாய் சும்மாயிருக்க அருள்வாய்...” என்று சொல்கிறார். இந்த மௌன உபதேசத்தின் சிறப்பு சைவ சித்தாந்தத்தின் உச்சநிலையாகும். அருணகிரிநாதர் முருகனிடம் பெற்ற மௌன உபதேசம் கந்தர் அநுபூதியில், “சும்மாயிரு சொல்லற என்றலுமே, அம்மாபொருள் ஒன்றும் அறிந்திலனே” என்கின்ற ஒரு நிலையாகும்.

எனவே தமிழுலகம் தாயுமான அடிகளாரின் பாடல்களைத் தினந்தோறும் ஓதிக் கடைத்தேற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய அவனது திருவடிகளை வழுத்துகின்றேன்.

---

# இளையான் குடிமாற நாயனார்

M. P. தியாகராஜன், B.A.

இளையான் குடிப்பதியில் மாறனார் குலத்துதித்தவர் இந்நாயனார் என்பதை விளக்கும் காரணப் பெயராக இவர்



திருநாமம் அமைந்துள்ளது. இவருடைய இயற்பெயர் இன்னதெனவும் பிறர் தெரிந்துகொள்ள இயலாத ஒரு பான்மையில், புகழை விரும்பாது வாழ்ந்தவரெனக் கொள்ளினும் கொள்ளலாம். அல்லது பக்தியின் முதிர்ச்சியால் “தன்னை மறந்தா டன்னாமங் கெட்டா டலைப் பட்டா ணங்கை தலைவன்றாளே” என்றபடி தம்மியற் பெயரால் தாம் வழங்கப்படாது இளையான் குடிமாறனார் என்று வழங்கப்பட்டிருக்கலாம். மிக்க செல்வத்தோடு தனவந்தராக இவர் வாழ்ந்துவந்தவராதலால் இவர் தாம் கொண்ட திருத்தொண்டின் வன்மையின் காரணமாகவே, தம் இயற்பெயரை இழந்திருத்தல் கூடுமென்று திட்பமாகச் சொல்லலாம்.

“மண்ணினிற் பிறந்தார் பெரும்பயன் அண்ணலார் அடியார்க்கு அமுது செய்வித்தல்” என்ற பிறவிப் பயனைக் குறிக்கோளாகக் கொண்டு தம் செல்வத்தை அடியார்களுக்கு அன்புடன் அமுதளிக்கப் பயன்படுத்தி வந்தார். அடியார்களென்று யாவர் தம்மில்லம் வந்தபோதிலும், எந்த நேரத்தில் வந்தபோதிலும், அவரை எதிர்கொண்டழைத்து இனிய வசனங்களினால் மகிழ்வித்துப் பாதங்களைக் கழுவி அன்னவரை ஆதனத்திலமர்த்தி அருச்சனை செய்து, பின்னர் அறுசுவை உண்டியை அன்புடன் அளிப்பர். அடியார்கள் சேவை எப்படியிருத்தல் வேண்டுமென்று இவர்களுடைய சரித்திரத்தினின்றும் நன்கு விளங்குமாறு சேக்கிழார் சுவாமிகள் தெரிவித்துள்ளார்கள். அடியவர்களுடைய ஆசீர்வாதத்தினால் அப்படி விருந்தோம்பி வாழும் இல்லத்தில் செல்வமிகும் என்று

“அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்”

தமிழ்மறை கூறுமெனினும், இளையான் குடிமாற நாயனார் நாளுக்கு நாள் தம் செல்வத்தை இழந்துவந்தனர். அவ்வாறு மறைக்கூற்றிற்கு மாறாக நிகழ்ந்தமைக்கு, அவருக்கு வறுமைப் பதம்புக “உன்னிலார் தில்லை மன்னினார்” என்று சேக்கிழார் பெருமான் காரணம் கூறுகிறார். வறுமையுற்றபோதும் தம் திருத்தொண்டினின்றும் இளையான் குடிமாற

நாயனார் வழுவமாட்டார் என்ற துணிபு கொண்டும், அப்படிப்பட்ட திருத்தொண்டின் திறத்தை உலகிற்கெடுத்துக் காட்டவேண்டுமென்ற கருணைகூர்ந்தும், தில்லைமன்னினார் அவருக்கு வறுமை வந்தெய்த உன்னி, பின்னர் ஒரு சிவனடியார் கோலத்தோடு ஒரு நாள் நள்ளிருளில் அவர் இல்லத்திற்கேகினார். அதுசமயம் வானமும் பொழிந்து கொண்டிருந்தது. மழையால் நனைந்து உள்ளே வரும் அடியாரைக் கண்டதும் நாயனார் அவரை எதிர்கொண்டழைத்து அவர்மேலிருந்த நனைந்த ஆடைகளைக் கழற்றி, ஈரத்தைப் போக்கி, உலர்ந்த ஆடைகளைக் கொடுத்துதவி, பாதங்களைக் கழுவி அருச்சனை செய்து ஒரு ஆசனத்திலமர்த்திவிட்டுத் தம் மனைவியிடம் சென்று அடியார் பசியை எவ்வாறு தணிப்பதென யோசனை கேட்டனர். அவரும் அத்தொண்டில் மனமுவந்து பயின்ற பான்மை வாய்ந்தவராதலால் தக்க யோசனை கூறினர். வயலில் விதைக்கப்பட்டிருந்த நெற்களைத் திரட்டிக் கொணருமாறு சொல்லவே நாயனாரும் மிகவும் சந்தோஷத்துடன் மழையென்றும் பாராமல், இருளென்றும் அஞ்சாமல், உள் உவகை உந்த வயல்களில் புகுந்து காலினால் தடவிக் கைகளால் முளைவந்த நெற்களை வாரிக்கொணர்ந்து மனைவியிடம் கொடுத்தார். அவற்றை அமுதாக்கக் காய்ந்த விறகில்லாமையால், "மனையில் நீடும் அலக்கினை அறுத்து வீழ்த்தார்" அதனை அவருடைய மனைவியாரும் முறித்து அடுப்பில் வைத்துத் தீமூட்டி நெற்களை வறுத்து அரிசியாக்கி இன்னடிசில் சமைத்தனர். கறியமுது செய்ய புன்செய் நிலங்களிலிருந்த இளங்கீரைகளை நாயனார் கொண்டுவந்து கொடுக்க அவைகளையும் வேறு வேறு கறியமுதாக்கி வைத்தனர் அவர் மனைவியார்.

பின்னர் அடியார் கோலத்துடன் உறங்குவதுபோல் படுத்திருந்த விருந்தினரை "ஈண்டு அமுது செய்தருள்க" என நாயனார் விளித்தெழுப்பினார்கள். எழுந்தவர் ஜோதி வடிவினராக எழுந்து இடபவாகனரூடராய் பார்வதிசமேதராய் காட்சியளிக்க சங்கரனே தம்மை ஆட்கொள்ள எழுந்தருளினரென்று, தம்பதிகள் இருவரும அக்கோலத்தைக் கண்டு காணும் காட்சியில் கலந்தனர்.

---

# நாலாயிரப்பிரபந்த விசாரம்

பாம்பன் ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள்

## நூல்

வாரீர் வைதிக சைவ மரபிற்றோன்றிய மாண்புடையோரே! நீவிரும் ஏனைய நடுநிலை நிற்பாரும், வைணவர் திராவிட வேதமெனு நாலாயிரப் பிரபந்தம் எத்தன்மைத்தென்பதை அதனானும், பண்டையார் வழக்கிற் பிரமாணமாகவுள்ள இருக்கு - யஜுர் - சாமம்- அதர்வணம்-சிக்ஷை-கற்பம் - வியாகரணம் - நிருத்தம்-சந்தோபிசிதம்-ஜோதிடம்-புராணம் - நியாயம் - மீமாஞ்சை - ஸ்மிருதியெனும் வித்தை பதினான்கனில் ஈண்டுக்கொள்ளப் படுவனவற்றானும், வேறு சில புத்தகங்களானும், யுக்தி அநுபவங்களானு முணர்ந்து, உண்மை கடைப்பிடிக்கும் ஆறு, யாம் அதிகாரமுறையாகக் கூறுதலைக் கேண்மின்!

**(க) பரமசிவனது திருவுரு வலப்பாகமும், விஷ்ணுமூர்த்தியினது திருவுரு இடப்பாகமுமாகவுள்ள கேச வார்த்த மூர்த்தியை ஆழ்வார் துதித்தாரென்பது.**

திருமங்கை யாழ்வார் பெரிய திருமொழி - பெரும் புறவென்றற்றொடக்கத்துப் பத்தின் ௭-வது பாட்டில், (1644)*

"கண்ணுதல்கூடிய - அருத்தனை யரியை * * * *
கண்ண மங்கையுட் கண்டுகொண்டேனே"

எனவரூஉம் இதில், கண்ணுதல் கூடிய அருத்தனை யென்றது நெற்றிக் கண்ணனாகிய பரமசிவனதுருவில் இயைந்திருக்கும் பாதியுருவுடைய விஷ்ணு மூர்த்தியை எனவும், வியமுடையென்றற்றொடக்கத்துப் பத்தின் க-வது பாட்டில், (1713)

"மழுவியல் படையுடை யவனிட மழைமுகில்
தழுவிய வுருவினர் * * * * கணபுரமடிகட மிடமே"

என்றது, மழுப்படையுடைய பரமசிவனது இடப்பக்கத்திற் பொருந்திய கார்மேகம் போன்ற மேனியுடைய விஷ்ணு மூர்த்தியானவர் எனவும், நண்ணாத வெனுந் தொடக்கத்து க-வது பாட்டில், (1106)

---

* இம்மாதிரி தரப்பட்டுள்ள எண்கள், மயிலை மாதவதாஸன் பதிப்பிலுள்ள பாட்டெண்கள்.

"பிணங்களிடு காடதனு ளடமாடு பிஞ்ஞகனே
டிணங்கு திருச்சக்கரத்தெம் பெருமானார்க்கு"

எனவரூஉம் இதில், பிஞ்ஞக னெனப்பட்டவர் சிவபராக்கிரம மூர்த்திகளிலொருவர். பிணங்களிடு காடென்றது (ஸ்காந்தத்தில் தக்ஷப்பிரஜாபதி கடாவுக்குத் ததீசி முனிவரருளிச் செய்த விடையின்படி) சருவ சங்கார கோர தாண்டவ காலத்திற் பிரம விஷ்ணுக்களுடைய வுடம்புகளையுந் தகிக்கும் மாயா பந்தநாசலிலாட நேத்ரஞானக்கினிமயானமாம். அங்ஙனம் (மும்மூர்த்திகளிலொருவரான காலாக்கினிருத்திரர் வாயிலாகக் கருணையாலே அந்தப்பிரம விஷ்ணுக்களாவியைத் தன்னக மடக்கியபடி, யவர்களுடம்பையு மடக்கவென்று அவ்வுடற் சாம்பரைத் தன்னுருவிற்றிமிர்ந்து எஞ்சிய வெண்டலைகளை மாலையாக வணிபரன் பிஞ்ஞகனுவான்) அவனுருவிற் பொருந்தியிருக்கும் விஷ்ணு மூர்த்திக்கு எனவும் பொருளாகும் வழியே பரமசிவனாது திருவுருவி னிடப்பக்கத்தில் விஷ்ணு மூர்த்தியினுருவுளதென்றறியலாவதே. இதனை பின்வரு செய்யுள்களு முறுதிப் படுத்தும். அவை பேயாழ்வார் இயற்பா ௬௩-வது னுக்கு (2344)

"தாழ்சடையு நீண்முடியு மொண் மழுவுஞ் சக்கரமுஞ்
சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால் - சூழுந்
திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக்
கிரண்டுருவு மொன்றா யிசைந்து"

எனவும், நம்மாழ்வார் திருவாய்மொழி ஒன்றுமெனுந் தொடக்கத்துப் பத்தின் ௧௦-வது பாட்டில், (3093)

"தடம்புனல் சேர்சடை முடியன்றனி யொருகூறமர்ந்துறையும்
உடம்புடையான் கவராத வுயிரினாற் குறைவிலமே"

எனவும், பொய்கையாழ்வார் இயற்பா ௨௮ - ல், (2109)

"மாமதிண் மூன்றெய்த - இறையானின் னாகத்திறை"

எனவும் வருமாறு காண்க.

இவ்வாறிவை புற்றிருக்கு மூர்த்தமானது ஸ்காந்தத்தின் சங்கர சங்கிதையிலுள்ள உபதேச காண்டத்து ௬௦-வது



அத்திபாயத்திலே கைலாயம் சிவலோக முதலிய ஸ்தானங்களிற் காரியார்த்தமாக அனாதியாயுள்ள இலிங்கோற்பவ முதற் கங்காதரம் ஈறாகக் கூறப்பட்ட (௨௫—) மஹேசுவர மூர்த்தங்களில் ஒன்பதாவதான கேசவார்த்த மூர்த்தமாகும். அன்றியும், அஷ்டாஷ்ட விக்கிரகமெனும் ௬௪ சிவமூர்த்தங்களில் ஒன்றுமாகும். இதனையே சங்கர நாராயணமூர்த்தமென்றும் கூறுப. ஆன்மாக்களுக்கு முத்தியேதுவான குருவினை யொப்பாஞ் சத்திநிபாதத்தை யுண்டு செய்வான் பரமேசுவரன், இவ்வுருவாக வெழுந்தருளி யுள்ளானென் பதை யடியிற் காட்டுங் காந்த வாக்கியத்தானும் அறிக.

"புண்யபாபேச மீக்ருத்யசாத்ம நாமீச்வ ரேச்வர :
ப்ரபச்சதி ஸ்வாத்மசக்தி பாதம் ஹரிஹராத்மநா"

சங்கை நிவர்த்தி :—குருபரம்பரை கூறுமாறு, நாலாயிரப்பிரபந்தம் பாடிய அந்த ஆழ்வார்கள் சென்ற நெடுங் காலத்திற்குப்பின், அதாவது இற்றைக்கு ௮௮௨-வருடங்களுக்குட்பட்ட சகவருஷம் ௯௩௯-சென்ற வர்த்தமான பிங்கள வருஷம் சித்திரைமாதத்திற் பெரும்பூதூரில் ஆசூரி கேசவப் பெருமாளென்னுஞ் சர்வக்கிரது தீக்ஷிதர்க்கும் பூமிப் பிராட்டியெனும் பெயரிய அவர் மனைவிக்கும் புத்திரனாகப் பிறந்து, யாதவப் பிரகாசரிடம் வேதாந்தம் படித்துப் பெரியநம்பி திருக்கோட்டியூர் நம்பியென்பாரிடம் வைணவ தீக்ஷை அஷ்டாக்ஷரோபதேசம் முறையே பெற்றுத், தங் காலத்தே பன்முறை நோவுசாத்திக் காலஞ்சென்று விட்ட யமுனைத்துறைவராகிய ஆளவந்தாரைப்பேராசிரியராக நினைத்திருந்த இளையாழ்வாரெனும் இராமானுஜர்செய்த அநுஞ்ஞை கடைப்பிடித்துத் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப் பிள்ளானென்பாரெழுதிய ஆறாயிரப்படியெனும் வியாக்யானமும், அதனை யதிகரித்துக் கூரத்தாழ்வார் மகன் பட்டருத்தரவுப்படி நஞ்சீயரும் நம்பிள்ளையுஞ் செய்த ஒன்பதினாயிரப்படியெனும் வியாக்கியானமும், அதனை யதிகரித்த படியாக இந்த நம்பிள்ளை சொற்படி வடக்குத் திருவீதிப் பிள்ளை யெழுதின முப்பதாறாயிரப்படி யெனும் வியாக்

யானமு* முண்டாய பின்பு ‘ பின்பழகிய பெருமாள் ஜீயர் ” என்பாரியற்றிய ஆருயிரப்படிக் குருபரம் பராப்பிர பாவத்திலுள்ள மதுரகவி யாழ்வார் வைபவத்தில், பிரமருத்திரர்கள் விஷ்ணு மூர்த்தியின் திருமேனியைப்பற்றி யிராதபோது, அவர்களுக்குச் சத்தை குலையுமென்றும், பற்றியிருக்கும் போது அவர்கள் பகவத் ஸ்தோத்திராதிகளுக்கு யோக்கியராயிருப்பார்க ளென்றும், வேறுபட்டபோது அவ்வித யோக்கியராயிரார்க ளென்றும், இக்காரணங்களால் ஹரியும் ஹரனுமாயுள்ள மூர்த்தியை ஆழ்வார்கள் துதித்தார்களென்றும் பொருளாம்படி யெழுதியிருக்கக் கண்டோம். இவ்வெழுத்து, யாதாமென்பதை விசாரிப்போம். அவ்வைணவர் கருத்தின்படியே, அசுத்த குணமுள்ள பிரமருத்திரர்கள், சுத்த குணமுள்ள ஹரியையடைவரெனக் கொள்ளினும், அஞ்ஞான்று கழிமலத்தை யடைந்த நறிய சந்தனமுந் தன் மணங்குன்றி யொழிவதுபோல, அந்த ஹரியின் சுத்தகுணமுங் குன்றிக் கெடுமன்றே. அற்றன்று, உப்புநீரி லுறையு மீனுக்கு அவ்வுப் பேறுததுபோல, ஹரிக்கும் அசுத்த மேறுதென்னின், அம்மீனில் உப்பின்மையான நற்குணமிருந்தும் அஃதுறை நீரிலுள்ள உப்பை மாற்றுந் தன்மைத் தாகாவாறே, ஹரியின் சுத்தகுணமும் பிரமருத்திரர்கள் அசுத்த குணத்தை அகற்றுந்தன்மைத் தாகாதென்றல் தேற்றமாம். அற்றன்று, சேற்றுநீரைத் தேற்றுங்கொட்டை தெளிவித்தாற் போல அக்காரியமு மாமென்னின், அப்படித் தெளிந்த நீரினின்றும் பிரிவுற்ற சேற்றோடு அக்கொட்டையுஞ் சேர்ந்தொழிவதுபோல, அவ்விருவரசுத்தத்தோடு விஷ்ணு சுத்தமுஞ் சேர்ந்தொழிவதுமன்றி, அத்தெளி நீர்போல அவ்விருவருமே சிரேஷ்ட வஸ்துவாவார்கள். அன்றியும் தெளிவுற்ற நீர் முன்போலச் சேற்றோடு கூடாதவாறே அவ்விருவரும் பின்றை அசுத்த மடையவு மாட்டார்கள். ஆவதேல் ஹரியை நீங்கி வேறுபட்டபோது இருவரும் அசுத்தராவரென்பது ஈண்டைக்கியையாது. அற்றன்று, கண்ணனது

*பன்னீராயிரப்படி யென்பதொன்றுண்டு. அது முப்பத்தாறாயிரப்படியி லடங்கற்பாற்றென்ப.



கதிரவனொளியிற் கூடியபோது, பார்க்க யோக்கியமுள்ளதாயுங், கூடாதபோது அவ்யோக்கியமற்றதாயு மிருப்பதுபோல, அவ்விடய மென்னின், வியாத்தியிலுள்ள கண்ணனது சிறிதும், வியாபகத்திலுள்ள கதிரவனொளி பெரிதுமாகலின், அக்காரிய மியையும். “ வலத்தனன்றிரி புரமெரித்தவன் ” எனும் நம்மாழ்வார் திருவாய் மொழியானும், (2705) மேலே காட்டப்பட்ட திருமங்கை யாழ்வார் செய்யுளானும், ஹரிபாகம் இடப்பக்கமான சிறிதென்பதும் ஹரன்பாகம் வலப்பக்கமான பெரிதென்பதும் வெளிப்படையாகலின், வியாத்தியிலுள்ள ஹரிகுணம் வியாபகத்திலுள்ள ஹரன் குணத்தைச் சேராதபோது செயலற்றதாகுமென்றும். ஆகவே வைணவ வரபிப் பிராயத்திற்கு நேர்விரோதமே, செய்யத்தக்க இவ்வுவமானமு மியையாது. இவையன்றி எவ்வித வுவமானத்தையெடுத்தாலும் அது இங்குக் காட்டிய வுவமானங்களின் கட்பட்டு, இயைபின்மை யுறுமல்லாமல், இயைபுண்மை யுறாது. இங்ஙனம் உவமானம் வேண்டா, ஹரிகருத்தின்படி ஹரியை யிருவருங் கூடும்போது சுத்தருங் கூடாதபோது அசுத்தருமாவரெனக் கொள்ளினென்கொலெனின், அளவை நூலாகிய நியாய சாஸ்திர விரோதமும், ஹரியினது கருத்தே யசுத்தமெனுந் தீர்வையுமுண்டாகும். அன்றியும். கூடிற் சுத்தமுங் கூடாவிடின் அசுத்தமும் அரன் அயனென்பார்க் குண்டாமெனற்கு, ஆழ்வார்கள் பாடல் வாக்கியங்களும் பிரபல சுருதி வாக்கியங்களு மில்லாமையால் அப்பேச்சுப் பிரமாண விரோதமுமாம்.

இனி, இருவரும் ஹரியைச் சேர்வது சுத்தத்தின் பொருட்டென்பாரை யொருவனோக்கி இலக்குமி ஹரியினது மார்பைச் சேர்வதும் அப்பொருட்டுத்தானோ? ஹரிக்கு அவ்விருவரும் இருபக்க வுடம்பாய்விட்டால் இலக்குமியிருக்கும ஹரியுடம்பு எங்ஙன மிருக்குமோ? இல்லாதொழியுமோ? அஞ்ஞான்று இலக்குமிதான் நீங்கியிடனுண்டோ ? ஹரனுருவிலொன்று பட்டதுபோல அயனுருவினு மொன்று பட்டதுண்டோ ? அவ்வுருவின் பெயரென்னை ? அது குறிக்குஞ் சுருதி யாது ? ஆழ்வார் பாடல்களிலேனு முண்டா ?

விஷ்ணுவானவர் அசுரர் அரக்கர் முதலினோரைக் கொல்லுங் குணந் தாமத மாகாதோ? அக்குணந்தான் சுத்தமோ? உருவமெரிகார் மேனியொன்று" எனும் பொய்கையாழ்வார் வாக்கின்படி, அக்கினிமேனி யரனுக்குங், கறுப்புமேனி யரிக்குமுண் மையாயின் அக்கினியின் அசுத்தத்தைக் கறுப்புத்தானோ நீக்குந்தகைத்து? சாத்துவிக குணங்கறுப்புத் தானோ? நுங்கூற்று வழியே கறுப்பாகிய களங்கம் களங்க நீக்கத்தின் பொருட்டே அக்கினியைச் சேர்ந்திருக்கிற தென்னின் நீரென் செய்வீர்? என்று கடாயினால் அவர் குன்றுமுட்டிய குரீஇ போலாகி மௌனமே சாதிப்பார் போலும். அந்தோ! அந்தோ !!

ஈண்டு,—"ஈசற்கிசைந் துடம்பிலோர்—கூறுதான் கொடுத்தான் திருக்கோட்டி யூரானே" என்று பெரிய திருமொழி எங்கள் எனுந் தொடக்கத்துப் பத்தின் ௪-ம் பாட்டில் (1841) திருமங்கை யாழ்வார் வெளியிட்டபடி அரிதான் அரனுக்கு உடம்பிலொரு கூறு கொடுத்ததாக ஏற்படுமாறு ஆழ்வார் பாட்டுக்களிற் பலவிடங்களினு மேற்படும். ஆயின் அரன்றான் அரிக்கு அக்கூறு கொடுப்பவனா வானென்னுங் கூற்று இயைபுடைமை யாமோவென்னின், கூறுதும் "பிஞ்ஞகனோ டிணங்கு திருச்சக்கரத்தெம் பெருமான்" எனும் அவ்வாழ்வார் (1106) கூற்றாலேயே அஃதினிதியையும். இயைந்தானும் இயையாவிடினும், அரி வலப்புறத்தை யரனுக்கும், அரன் இடப்புறத்தை யரிக்குங் கொடுத்தாற்றான் இருவர் முழுவுருவு மொன்றோடொன்று ஏய்ந்த இருதிற ஒருமூர்த்த மாகுமாதலால் விரோதமேது மில்லை.

உலகழிவாம் பிரளய காலத்தில் பிரமதேவர் விஷ்ணு மூர்த்தியிலொடுங்குவார்: பின்னர்த் தோன்றுவார்: அவ்வொடுக்க தோற்றங்களையே அம்மூர்த்தியைப் "பற்றியிருக்கும்போது" என்ற தென்னின், அதுவும் பொருந்தாது. என்னை? அவ்வித பிரளய மேற்படாத இக்கலி காலத்திற் பிறந்திருந்த நம்மாழ்வார் "கங்குலு" மென்றெழும் பத்தின் ௧௦-ல் (3257) "நான்முகக் கடவுளேயென்னும்—வடிவுடை



வானோர் தலைவனே யென்னும்" என்று துதித்தமை காணப்படுகின்றது. இது வைணவர் தீர்மானப்படி அரியைப் பற்றியிராத அசுத்தப் பிரமாவைத் துதித்த தாகுமாகலின் வானோர் தலைவனே என்றது இந்திரனை. இவ்விந்திரனோடு அரிஅயன் அரனென்று மூவருமொன்றுபட்ட மூர்த்தம் எந்நூற் கண்ணுங் கூறப்பட வில்லையாகலின், அந் நால் வரையுந் தனித்தனி வழுத்தியதெனல் ஏற்புடைத்தாம்.

ஈண்டுக் கூறிப்போந்த அசுத்த சுத்த விவகாரத்திற்கு ஏது:—பிரமாவுக்கு இராஜதகுணமும் உருத்திரனுக்குத் தாமதகுணமும் விஷ்ணுவுக்குச் சாத்துவிககுணமு முண்டெனக் கொண்டதேயாம். இவ்வாறு கொண்ட அவ் வைணவரும் பிறரு முணருமாறு இம்பர் விளக்குதலென்னை யெனின்,

> கவலெது மிலாதசுக சத்வபிர வர்த்த
> கன்சிவ னெனத் தெளிவுசொல்லிடு சுவேதா
> சுவதர மொழிக்கிசையவே யிறுதி நாளிற்
> சோர்வற வுஞற்றதொழி லின்றலை மையாலே
> கவுரவ தமோகுணமு நாளுமதி சுத்தங்
> காணுமுழு ஞானமய முஞ்சிவனுக் குண்டென்
> றவமில்பிர மாண்டமு மாற்றுமிதை யாய்ந்தோ
> ரண்ணலர னைத்தமச னென்னவிசை வாரோ.

என்னுந் திருப்பாவின்படி சத்துவகுண பிரவர்த்தகன் சிவனென்று யஜுர் வேதத்துச் சுவேதா சுவதரோபநிடதஞ் சொல்லுமாற்றானே, எஞ்ஞான்றும் அதிசுத்த குணமுஞ் சங்கார காலத்தில் கௌரவமான தமோகுணமும், அந்த அரனுக்குண்டெனப் பிரமாண்ட புராண மத்தியபாக இளோ பாக்கியானமுங் கூறும். அன்றியும், பதினெண் புராணங்களிலொன்றாய சைவ புராணத்து ஞானசங்கிதை (௨-வது) அத்தியாயம் உருத்திரனுக்கு உள்ளே சாத்துவிகமும் வெளியே தாமதமும் விஷ்ணுவுக்கு உள்ளே தாமதமும், வெளியே சாத்துவிகமும், பிரமாவுக்கு உள்ளும் புறமும் இராஜதமு முண்டென்றுரைக்கும். விவரித்த வெளிக்குணம் நோக்கியே பிரமவிஷ்ணு ருத்திரர்கட்கு முறையே இராஜதம், சாத்துவிகம், தாமத முண்டென்று சுருதிகள் சில விடங்

களிற் சொல்லும். இம்மூவரிலும் உள்ளே சத்துவ குண முள்ள உருத்திரனே மற்றை யிருவரையு முடிக்குஞ் சங்கார கர்த்தாவாகலின் அவனே மேலானவனென அறிவதற்கு.

"திரிமூர்த்திகளி லுருத்திரனே திகழ்சத்துவ நற்குணதேக
மறியதிறத்தோ னதலினல் விசேடனுவான் மாதவத்தீர்"

"எல்லா வற்றினும் பிரமமென்னு மதியேவிசேடமா
சல்லார்புகழு முருத்திரற்கு நகுமுள்ளே சத்துவகுணமும்
மல்லார்வெளியே தமோகுணமு மாயற்குள்ளே தமோகுணமும்
வில்லார்வெளிச்சத்து வகுணமுமுள்ளவென்பார்மெய்யுணர்ந்
"உள்ளும் புறமும்பிராசதமே யுளதுமலர் மேயவற்கு" [தோர்"

என்பனவும்போது மானவைகளே. இச் செய்யுள்களைத் தரும் காந்தத்துச் சூதசங்கிதையின் பரம விஞ்ஞானமுரைத்த அத்தியாயமானது இவ்விடயத்தை மிகவும் வலியுறுத்திக் கூறுதலினல் அதுகுறித்து ஈண்டு அதிகம் விளக்கவில்லை. ஆண்டுப் பரக்கக் காண்க. இத்துணைப் பெருமைவாய்ந்த உருத்திர மூர்த்திக்கும் மேலாயுள்ள சிவபெருமான் நான்காவது மூர்த்தியாகலின், அவர் முக்குணரகித நிர்க்குணரும், மிக்க பொறுமையெனுஞ் சாந்த பிரசாந்த சீலருமாயுள்ளாரென்பது :—

"ப்ரத்யய ஸாரம் ப்ரபஞ்சோபசமம் சாந்தம்சிவ
மத்வைதம் சதுர்த்தம் மந்யந்தே"

எனும் அதர்வணவேத மாண்டூக்கியோபநிஷத் வாக்கியத்தானும்,

"பஞ்சவக்த்ர முமாஸஹாயம் நீலகண்டம் ப்ரசாந்த
மந்தர் லக்ஷ்ய மிதிகேசித்"

எனும் யஜுர் வேத மண்டலப் பிராம்மணோபநிஷத் வாக்கியத்தானும்,

"உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசனம்
நீலகண்டம் ப்ரசாந்தம்"

எனுமேற்படி வேத, கைவல்யோபநிஷத் வாக்கியத்தானும்



"தங்கள் விபூதியினுமும்மூர்த்திக ளதிகர்சாற்ற வருட்
பொங்குமுருத் திரனதிகன் பொலிதரு வவ்வுருத்திரனிற்
சிங்கலின்மாயாவி சிட்டமான சருவக்கிய சிவன்
துங்கமிகு பெருந்தவந்தீர திகனெனச் சொல்லுவரால்"

எனுமேற்படி சூத சங்கிதை மேற்படி யத்தியாயச் செய்யுளானும்,

"முத்தன் பூரணனனந்தரூபன் பர்க்கன்முழுச் சருவாதார
னித்தியன் வரப்பிரசனி ராமயனிர்க்குணன் வேதாந்தன்"

என வருமேற்படி சங்கிதை பரமசிவ நாமவைபவ அத்தியாயச் செய்யுளானும், பின்னர்க் காட்டப்படு பிரமாணங் களானும் வலியுறுத்தப்படும். "பொன்றி கழுமேனிப் புரிசடையும் புண்ணியனும்" எனும் பொய்கையாழ்வார் வாக்கிலுள்ள (2179) புண்ணியனு மென்சொல்லும், பரமசிவனது தூய தன்மையையே குறிக்கின்றது. இவையிற்றையெல்லா மறியாத் தாழ்வினலோ! பொல்லா ஆழின் பயனலோ? சிவ தூஷணஞ் செய்ய வேண்டுமெனும் பேராசையினலோ! மற்றெதனலோ மேற்காட்டிய குருபரம்பரா ப்பிரபாவ மெழுதினவர், சிவனுக்க சுத்தங் கற்பித்தனர். இது வொன்றே, மேற்படி பிரபாவம் நம்பிள்ளை வைபவத்தில் "சிவபஞ்சாக்ஷர முதலான க்ஷுத்ரமந்திரங்கள்" எனவும், இளையாழ்வார் வைபவத்தில் "வேதவிருத்தமான கள்ளப் பொய்ந் நூலாகிய சைவாகமத்தை எனவுந் தூஷித்தவாறு தூஷித்துள்ளன பலவென்க. அன்றியும், திருமழிசையாழ் வார் வைபவத்தில் அவ்வாழ்வாரைச் சுட்டுமிடங்களில் மரியாதைப் பன்மை பொருந்த "இவர்" எனவும் சிவபிரானைச் சுட்டுமிடங்களில் அப்பன்மையின்மையாக "அவன்" என வும், திருமங்கையாழ்வார் வைபவத்தில் அவ்வாழ்வாரை யுந் திருஞானசம்பந்தசுவாமிகளையுஞ் சுட்டுமிடங்களில் அவ் விதமே இவரெனவும், அவனெனவும், ஆழ்வாரெனவும், சம்பந்தனெனவு மெழுதிவைத்தார். இச்செய்கைதான் சாத்துவிககுண விஷ்ணுமூர்த்தியினது தன்மையை யடைந் தவரிவரென்று தம்மைக் காட்டுமென்பது அவர் கருத்துப்

போலும். "அக்கும்புலியினதளுமுடையாரவரொருவர் பக்க நிற்க நின்ற பண்பரூர்" என்று திருமங்கையாழ்வார் செய்யுளகத்தும் (1798) பன்மையாகவே கூறினார். அவரினும் வசனக்குழுவில் ஒருமையினுரைத்த விவருயர்ந்தவர் கண்டீர்!

மேற்கண்டபடி சைவாகமத்தைத் தூஷித்த அவர், தமது மதபாஞ்சராத்திராகமங்குறித்துப் பதினெண் புராணங்களிலொன்றாய கூர்மபுராணத்தின் திருக்கலியாண அத்தியாயத்தில்,

"சாறுங்வாங்காபாலஞ் சாற்றும் பாஞ்சராத்திரநூல்
மாறு செய்யும் வாமமுள்ள மயங்கச்செய்த நூலாகுந்
தேறயிந் நூற்படிநின் றோரிவற்றை யுலகிற்செப்பிடுவோர்
பாறுதொடரு நரகத்தினளப் பில்காலம் படிந்திடுவார்"

எனவரூஉஞ் செய்யுட் செய்திக்கென் செய்வார்! சூதசங்கிதை ஞானோற்பத்தியில்லாமைக்கேது நவின்றவத்தியாயத்தில், "பாமரரே கொளும் பாஞ்சராத்திரம்" என வருதற்கென் செய்வார்! மேற்படி மோசகனை யுரைத்த அத்தியாயத்தில், "மறைமூலகமாகாதுலகின் மருவு பாஞ்சராத்திர நூற்றுறை போமவர்கள் யாரேனுந் தொலையாப் பாவத்துறை சென்றோர்—கறையார் பவினசித்தரே கைக்கொள்வார் களந்நூலை—யனைரகோடிகற்பமாயிடினு மன்னார் முத்தியடைவரிதே" என வருதற்கென் செய்வார்! வாசுதேவாதி வியூகங்கூறும் அப்பாஞ்சராத்திரம், சுருதிக்கு முரணென்று பிரம சூத்திரம் (உ-வது) அத்தியாயம் உ-ம் பாதம் "உத்பத்யஸம்பவாத்" எனுஞ் சூத்திரத்தின் மறுக்கப்பட்டுளதே அதற்கென் செய்வார்! சைவாகமங்கட்கு இழிவேற்றுவார் கூற்றனைத்தும் பிரமவித்யாவிலாசநிரசன மெனும் பழநூலொன்றனில் றாமசத்துவநிராகரண மெனும் அதிகாரத்துழை மேற்கோள் வாயிலாகப் பெரிதுங் கண்டிக்கப்பட்டனவாகலின் அங்குக்கண்டு தெளிக. எம்முடைய கத்தியபத்திய நூல்களானுந் தெளிக.



தெளிந்தவாறு, சிவனார் சுத்தராயின் அவரைப் பித்தன் என நிகண்டு முதலிய நூல்கள் நிகழ்த்துதலென் கொலென்னின், தொண்டரடிப் பொடியாழ்வார் திருமாலை ச-ம் பாட்டில் (875) "நம்மரங்கனைய—பித்தனைப் பெற்றுமந்தோ பிறவியுட் பிணங்குமாறே" என்று கூறியபடி, அரங்கநாதராகிய நாராயணரும் பித்தனாகின்றார். வைணவர் அச் சொற்பொருட் சால்பு உணர்வாராயின், இக்கேள்வி கேட்க இடமின்றென்க.

இனி, மும்மூர்த்திகளும் வழிபடத்தக்க அந்தப் பரமசிவத்தின் ஒவ்வோரமிசமே ஒவ்வொரு மூர்த்தமாகி, அவை நித்தியமாய்ச் சிவலோகத்திலுள்ளமைபோல மேல் விளக்கப்பட்ட கேசவார்த்த மூர்த்தமுஞ் சிவலோகத்திலுள்ளதென்றறியற்பாற்றே. அது சிவாமிசமுங் கேசவாமிசமும் நீக்கமறக் கூடியுள்ள நித்திய மூர்த்தமென்பதை,

"பொன்றிகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகந் தாயநெடுமாலும் என்றும்
இருவரங்கத் தாற்றிரிவரேலு மொருவ
னொருவனங்கத் தென்றுமுளன்"

என்னும் பொய்கையாழ்வார் செய்யுளில், (2179) எப்போதும் அரன் அரியெனுமிருவரும் வேறு வேறு மூர்த்திகளாயிருப்பினும் ஒருவருருவிலொருவர் எக்காலு நீங்காதிருப்பரெனவாம் பொருளில் "என்றுமுளன்" என்பது இனிது விளக்கி நின்றமை காண்க. அன்றியும் (2086).

"அரனாரணனாமமான் விடைபுள்ளூர்தி
யுரைநூன் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கருமமழிப்பளிப்புக் கையதுவேனேமி
யுருவமெரிகார்மேனி யொன்று"

என்னும் அவரது செய்யுள்—பெயர் அரனும் நாரணனும், வாகனம் ஏறுங் கருடப் புள்ளும், உரை செய்த நூல் வேதம், திருக்கோயில் திருக்கைலையுந் திருப்பாற்கடலும், தொழில் அழிப்புங்காப்பும், கையாயுதம் சூலமுஞ் சக்கரமும், உருவம்

அக்கினி மேனியுங் கறுப்பு மேனியுமென்றும், இவையொன்றென்றும், பொருளாதலுங் காண்க.

இங்கே, கருடனொடு கூடாத ஏற்றையும், திருப்பாற் கடலொடு கூடாத திருக்கைலாய மலையையும் ஆழ்வார் வழுத்தினமை கொண்டு, இருவர் உருவையுந் தனித்தனி துதித்தலுமவர்க்குச் சம்மதமென்பதூஉம், இருவருடைய உருநாமம் உடைமைகளையும் வேறுபடுத்தலொண்ணாதென்பதூஉம் அறியப்படுதலினாலும், இவ்விடயம்பற்றி, மேலே யாங்காட்டிய நியாயங்கள் தெள்ளிதினுறுதிப்படுதலினாலும், அரனுக்கு அரியைப்பற்றியிருக்கும்போது சுத்தமும் பற்றுதிருக்கும்போது அசுத்தமுங் கற்பிக்கு நிமித்தங் கேசவார்த்த மூர்த்தங்கூடிப் பிரியுமென்பார் கூற்று ஒரு சிறிதும் பயன்படாதொழிந்தமை கூர்த்தபுத்தியுடையார்க்கு எளிதிற் புலப்படும். இன்னுமுரிய பிரமாணங்களை வந்துழி வந்துழிக் காண்க.

(முதலாவது அதிகார முற்றிற்று)

---

## சிவசக்தி மூர்த்தம் நான்கனில் விஷ்ணு மூர்த்தமும் மொன்றேன்பது

திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி ஒரு குறளாயென்றற் றொடக்கத்துப் பத்தின் க-வது பாட்டில் "பிறை தங்கு சடையானை வலத்தே வைத்துப் பிரமனைத் தன்னுந்தியிலே தோற்றுவித்துக்—கறைதங்கு வேற்றடங்கண் திருவை மார்பிற் கலந்தவன்" (1186)—என்றபடி இளஞ் சந்திரனை விளங்கிக்கொண்டிருக்கும் ஜடாமண்டல மஸ்தகனாகிய பரமசிவனை நாயகனாக வலப்புறத்தில் வைத்துக்கொண்டு பிரமதேவனாகிய பிள்ளையை உந்தியாகிய கமலயோனி வழியாகத் தந்தவர் விஷ்ணுமூர்த்தியெனவாதலினால், அம்மூர்த்தி சிவசக்தியாயினமை ஈண்டு உணரற்பாலதே. அற்றாகலினன்றே—"கமலயோனி" மெனுமொரு பெயரையும் பிரமன் பெயரில் நிகண்டு நிகழ்த்துகின்றது.



மேற்படி பெரிய திருமொழி—பெரும்புறவென்றற் றொடக்கத்துப்பத்தின் கூ-ம் பாட்டில் (1640) "வாசவார் குழலாண்மலை மங்கை தன்—பங்கனைப் பங்கில் வைத்து கந்தான்றனை * * * கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே" எனவும், நம்மாழ்வார் திருவாய்மொழி—சார்வேயென்றற்றொடக்கத்துப்பத்தின் (3705) ச-ம் பாட்டில், "மாகத்திளமதியஞ் சேருஞ் சடையானைப் பாகத்து வைத்தான்றன் பாதம் பணிந்தேனே" எனவும், வருவனவற்றுள் பங்கில் வைத்துகந்தான், 'பாகத்து வைத்தான்' என்பவைகளும் மேலைச் செய்யுட் பொருளையே தழுவுகின்றன. இவ்வித அருத்தத்திற்கு மேற்கோளுண்டோவென்னின் உண்டு. என்னை? பதினெண் புராணங்களிலொன்றான இலிங்க புராணம் பூர்வகாண்டம் (உ0-வது) அத்தியாயம் கஅ-வது பாட்டில் "மலைமகள் கொழுநன் பீசிபீச மற்றியான் யோனிதன் பீசம்—உலகெலா முன்னந் தோற்றுவிப்பதற்கென் யோனியில் வைத்தனன்" எனவருமுரைகளில் சிவபெருமான் பீசமுடைய பீசி, பிரமனாகிய நீ அவனது பீசம், ஹரியாகிய நான் யோனி, உலகெலாமுண்டாக்கு நிமித்தம் அவனது பீசத்தை எனது நாபிக்கமல யோனியில் வைத்தனன் எனவும், ஸ்காந்தத்துச் சங்கரசங்கிதை ஆசுரகாண்டம் கஅ-வது அத்தியாயம் (அ, கூ)-ம் சுலோகங்களில் "நீ நமது நான்கு சத்திகளின் மத்தியிலான புருஷனெனுஞ் சத்தியாதலினால் முன்னமே யுன்னோடு புணர்ந்து பிரமனைப் பிறப்பித்தோம்" எனவும் பொருளாமாறு காண்க. இச்சுலோகங்களிலுள்ள செய்தியானது மோகினியாய் அமரரவர்க்கு அமுதம் பங்கிட்டுக்கொடுத்து நிற்கும் விஷ்ணு மூர்த்திக்குச் சிவபிரான்றெரிவித்தது. கோபத்தினலாகுங் காரியத்திற்குக் காளி, யுத்தத்தினலாகுங் காரியத்திற்குத் துர்க்கை, புருஷரூபத்தினலாகுங் காரியத்திற்கு விஷ்ணு, சம்போகத்தினலாகுங் காரியத்திற்கு உமை யெனப்படு நான்குமே அந்தச் சிவசத்தி மூர்த்தங்களெனவறிக. மேற்றுலக்கிய கஅ-வது அத்தியாயம் பகருமாறு ஹரிஹர புத்திரரைத் தருவதற்காகச் சிவபிரான் அந்த மோஹினியைப் புணர்ந்தது போலப்

புருஷரூப சக்தியைப் புல்குவது ஏகதேசமாமென்க. இவ்வித சக்தி நாயகனாகிய சிவபெருமானைச் சுருதி முடிவறியா வைணவர் பலவாறு இகழ்வது அதிபாதகமேயாம. மேலே பீசமென்றது சிவனாரது ஊர்த்துவ சுவர்ணரேதசு ஆம்.

## சங்கை நிவர்த்தி

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" என்று ஆழ்வார் கூறியது,—விஷ்ணுமூர்த்தியிடத்தினின்றும் அரனும் அயனுந் தோன்றலால் அதுவேயென்னின், அங்ஙனம் 'வலத்தே தந்து' எனவிருப்பின் அஃதியையும் 'வைத்து' என்றிருத்தலினால் இயையாது. என்னை? தன் காலத்துள்ளா னொருவனையே அவ்வாறு வைக்கவேண்டுமாகலின். இதுவேயுமன்றி, ஹரி அயனையுண்டாக்குவார் அவ்வயன் ஹரனையுண்டாக்குவானென்னும் வைணவர் கோட்பாட்டுக்கு ஹரியினிடப்புறத்தும் வலப்புறத்தும் அவ்விருவருமுதிப்பா ரென்றல் எட்டுணையும் பொருந்தாது. மேற்காட்டப்பட்ட மேற்கோட் பிரமாணங்களுக்கும் விரோதமாம். இருவர் தோன்று விவரம் பின்னர் விளக்குமிடத்து விளங்கும்.

இன்னன நியாயங்களானும், பிரமாணங்களானும், வலப்பாகம் ஆண்பாலும் இடப்பாகம் பெண்பாலுமெனும் வழக்கானும், விவாககாலத்தில் வலப்பக்கத்தில் ஆணும் இடப்பக்கத்திற் பெண்ணுமிருக்கும் முறையானும், தாருகா வனத்திருடிகண் மதமொழிப்பான் சிவபெருமான் ஆணுரு விளங்கச் சென்ற காலத்து விஷ்ணுமூர்த்தி பெண்ணுருக் கொண்டு சென்றமையானும், இருவருங்கூடி ஹரிஹர புத்திரரைத் தந்தமையானும் விஷ்ணு மூர்த்தியின் உந்தியி லுதித்த பிரமதேவர் சிவபெருமானைப் போலச் சுவர்ண நிறமுடையராய் ஐம்முகத்துடன் றோன்றினமையானும், புருடர்கள் இடக்கையைக் கீழ் வைத்தும் பெண்கள் வலக் கையைக் கீழ் வைத்துந் துயில வேண்டுமென்ற முறைப் படி, விஷ்ணுமூர்த்தியும் வலக்கையைக் கீழ் வைத்துச்



சயனிக்கின்றரென்று "திருவரங் கரிணையிலா வொரு புயங்கவணையிலே திகழ் வலக்கை கீழதாமுகிழ்மலர்க்கண் வளர்வதோர் கருணை" எனப் பிள்ளைப் பெருமாளை யங்கார் கூறுதலினாலும், திருமழிசையாழ்வார் இயற்பா (2446) கூரு-ம் பாட்டில் "மாதாயமாலவனை மாதவனை" என்பதனுள் மாதாய' என்பது விஷ்ணு மூர்த்தியி னது பெண் தன்மையைக் குறிக்கின்றமையானும், திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத் திருமுறை "அரியலாற் றேவியில்லை யையனை யாறனார்க்கே" என முழங்குகின்றமை யானும் விஷ்ணுமூர்த்தி சிவசத்தியுளொன்றான மாயாசத்தி யென்பது நனிதுணியப்படுதலினால் அவ்வாறன் றென்பார் மாற்றமெல்லாம் பொருந்தாவென மறுக்க.

இங்கே, கூரேசவிஜயம் மோஹினி வடிவக்கட்சி கஎ-ம் பாட்டில் "அங்கேயரனடி மீமிசையையன் பிறவியதாம்" என வருமாறு சிவனார் அமுதம் பங்கிட்ட மோஹினியைப் புணரவில்லை. அவரது விந்து அவரது பாதத்தில் வீழ்ந்தது. அதினின்றுஞ் சாஸ்தாவெனும் ஐயனார் பிறந்தாரெனக் கோடுமென்னின், அந்தச் சாஸ்தா பெயர் "ஹரிஹரபுத்திரர்" எனவிராது "ஹரபாத புத்திரர்" எனவிருத்தல் வேண்டும். அப்படி இல்லாமையால் அவ்வாறு கொள்ளொண்ணாதென்க. இஃதியையாவிடினும், ஹரிஹரபுத்திரர் எனக்கொண்டு அதற்கியையச் சிவனாரது விந்துவை மோஹினி தன் கரத்திற்றாங்கிடலும் அச்சாஸ்தா பிறந்தாரெனக் கோடலாம் பிறவென்னின், விந்துவைக் கரத்திற்றாங்கினதெனும் அவ்விடயமுந் தாருகா வனஞ்சென்ற மோஹினிக்குச் சிவனார்மீது மோஹமுண் டானவாறே இம்மோஹினிக்குமுண்டானதையே காட்டுமென்க. முன்மோஹமாகிய 'மால்' என்பதே விஷ்ணுமூர்த்திக்கு அஞ்ஞான்றொரு பெயராய மைந்ததென்க. இது, "முன்பனது நவையெல்லாமுகனுறு விழியான் மாந்தித்— துன்புறு மான்மீன் கொள்ளத் துன்னென வரியுஞ் சோர்ந்து—மன்புடையருளால் வந்[illegible]றனைக்கு

மாலோனென்பதோர் பெயருமஞ்ஞான் றெய்தியபோது மன்றோ " எனுங் கந்தபுராணத் திருவிருத்தத்திற் பெறுதும். அம்மாலான மோஹினியுஞ் சிவனாருஞ் சாலவிருக்ஷத் தடியிற் புணரும்போது அவர்களுடம்பினின்று முண்டான வியர்வையே கண்டகி நதி யானதும், அதனிருமருங்குஞ் சக்கிராகாரமான தாரைகள் விளங்க வச்சிரதந்தி யெனுங் கீடங்கள் நாளுமுண்டாகின்ற மகிமையும், சிவதாதுவாகிய பொன்னோடு உற்பத்தியாகுமவை சாலவிருக்ஷம் சம்பந்தவிடம் பற்றிச் சாலக்கிராம மெனும் பெயரோடு விஷ்ணு பக்தர்கள் விஷ்ணுஸ்வரூபமாகப் பூஜிக்க விளங்குதலும் அப்புணர்க்கையை ஆசங்கையறக் காட்டுதற்கு உரியன வென்பது முணர்க. கூரேச விஜய விருத்தாந்தம் பின்னர்ப் பிரகாசப் படுத்திக் காட்டுமிடத்துக் காட்டுதும். விஷ்ணுவானவரைச் சிவமாயா சக்தியென்பது 'புருஷோத்தமன்' எனு மவர் நாமத்திற்கு மாறுகாதோவெனில் பிரகிருத ரூபிணியெனும் விஷ்ணு மூர்த்தியாகிய தனக்கு, " தமேகம் புருஷம் ருத்ரம் " " சிவ: புருஷ ஈசானோ " " தத்புருஷாய வித்மஹே " எனுஞ் சுருதிவாக்கியங்களின்படி புருஷனுயுள்ள சிவனார்க்கு உத்தமமாக நடக்கும் உத்தமனெனவும், பிரமனாதி தேவர்க்குட் சிறந்தவனெனவும். பொருள்கொள்ளு மாற்றானே மாறுகதென்க. மயித்திரேயருக்குப் பராசரர் சொன்ன விஷ்ணுபுராணம் க-வது அமிசம் உ-வது அத்தியாயத்தில் "பிரதான சத்தவாச்சியமான மூலப்பிரகிருதியொன்றுமே, சமஷ்டி புருஷ ரூபமாக விருந்தது" "ஸ்ரீ விஷ்ணுவினுடைய சரீரமான பிரகிருதியானது மகத்தத்துவத்தை மூடிக்கொண்டது " எனவருதலும் இதனை யுறுதிப் படுத்தும். இப்படி மூலப் பிரகிருதியெனும் மாயா ரூபிணியாய், விஷ்ணுமூர்த்தியிருத்தலினாலன்றோ, அவரை யொரு ஆனை, ஆபத்துக் காலத்தில் 'ஆதிமூலம்' எனவுங் கூப்பிடலாயிற்று. இங்கே மேலே போந்த பிரதானமெனும் மூலப் பிரகிருதியே ஆதிமூலமென்க.

(...டாவது அதிகார முற்றிற்று)

(தொடரும்)

# ஆண்டாள் திருப்பாவை

மூவாயிரப்படி, ஆறாயிரப்படி, சுத்தஸத்வம் தொட்டாசார்யர் ஸ்வாபதேசம், வானமாமலை ஜீயர் ஸ்வாபதேசம், பல ஆராய்ச்சிக் குறிப்புக்களடங்கிய 616 பக்கம், நல்ல வெள்ளைக் காகிதத்திலச்சிடப் பெற்று, முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்றது.

## மயிலை மாதவதாஸன் பதிப்பு

பிரதி ஒன்றின் விலை ரூபா இரண்டரை ; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூபா ஒன்று.

# நாலாயிரதிவ்யப்ரபந்தம்

**மயிலை மாதவதாஸன் பதிப்பு.** விலை ரூபா மூன்று ; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0. வி. பி., ரயில்வே பார்சல் மூலம் அனுப்புவதில்லை.

கிடைக்குமிடம் :—

**ம. பாலசுப்பிரமணிய முதலியார்,** பி.ஏ.,பி.எல்.,
திருவருளகம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை—1.

---

## பெரியபுராணம் மூலம்

சமாஜ மூன்றும் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும்பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0.

## திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும்பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர்பைண்டு விலை அணா பன்னிரண்டு

# தேவாரம் அடங்கன்முறை

## மயிலைகிழார் இளமுருகனார் பதிப்பு

ஏழு திருமுறைகள், 8250 பாடல்கள், 1488 பக்கம்; இதில் 160 பக்கங்களில் 150 தலைப்புக்களில், பல உட்பிரிவுகளில், பற்பல ஆராய்ச்சி நுட்பக் குறிப்புக்கள் உள்ளன. 274 பாடல் பெற்ற சிவஸ்தலங்களுக்குச் செல்லும் வழிவிவரம், திருவிழாச் சிறப்பு, கல்வெட்டுக் குறிப்பு, ஒவ்வொரு தலத்திற்கும் உள்ள பாடல்களின் குறிப்பு முதலியன எல்லாம் அடங்கிய அருமையான பதிப்பு.

ஒரே வால்யூமாக முழு கலிக்கோ பைண்டு விலை ரூ. 7—0—0 ; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—9—0.

இரண்டு வால்யூமாக முழு கலிக்கோ பைண்டு விலை ரூ. 8—0—0 ; ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—10—0.

வி. பி. மூலமாகவும், ரயில்வே பார்சல் மூலமாகவும் அனுப்புவதில்லை.

பாம்பன்-குமரகுருதாச சுவாமிகள் அருளிய

**செவியறிவுறூஉ** விலை அணா 3

**சிவஞான தீபம்** விலை அணா 8

தபாற்கூலி வேறு.

கிடைக்குமிடம் :—

**ம. பாலசுப்பிரமணிய முதலியார்**, பி.ஏ.,பி.எல்.,
திருவருளகம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
சென்னை-1.


Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi Edited by M. Balasubramanya Mudaliar, B.A., B.L., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 192, Lloyd Road, Royapettah, Madras-14.